# பத்துப்பாட்டில் இல்லற புழங்கு பொருட்கள்

*ஞா. கலையரசி*
கௌரவ விரிவுரையாளர், தமிழ்த்துறை
அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரி, வெட்டுக்காடு, சேந்தமங்கலம்
DOI: https://doi.org/10.5281/zenodo.13783467

**ஆய்வுச்சுருக்கம்**

*சமூக வளர்ச்சியில் குடும்பம் ஓர் அடிப்படை நிறுவனமாகும். குடும்ப வளர்ச்சியே விரிந்து சமூகமயமாதலுக்கு வழிவகுக்கிறது. குடும்பம் செம்மையாக இருந்த நிலையில்தான் இல்லறம் உருவாகும். இல்லத்தில் நடக்கும் வாழ்க்கைச் சூழலில் அன்றாடம் பலவகையான புழங்கு பொருட்களை மனிதன் பயன்படுத்துகிறான். அவை தொழில் சார்ந்தவை, இல்லறம் சார்ந்தவை போர் சார்ந்தவை என்று பல வகைகள் உள்ளன. இங்கு இல்லறம் சார்ந்த பொருட்களாக சாடி கண்ணல், உலக்கை, உரல், மத்து, அகல், தசும்பு, களம் போன்ற பல வகையான புழங்கு பொருட்களை பத்துப்பாட்டில் எவ்வாறு பதிவு செய்யப்பட்டுள்ளன ஆராயப்பட்டுள்ளது. இப்புழங்கு பொருட்கள் சமுதாயத்திற்கு தகுந்தாற் போல் மாறுபடுவதையும் இக்கட்டுரையில் ஆராயப்பட்டுள்ளது.*

***கலைச்சொற்கள்:*** *இல்லறம், புழங்குபொருள், பத்துப்பாட்டு, உலக்கை, மத்து, அகழ், களம், கன்னல்.*

**முன்னுரை**

*பத்துப்பாட்டில் உள்ள மாந்தர்கள் பயன்படுத்திய பல வகையான இல்லற புல்லங்கு பொருட்கள் உள்ளன. இதில் தனிக்குடும்பத்தை மையமிட்ட இல்லத்தில் பலவகையான இரும்பு, மரம், கல், உலோகங்கள் போன்றவற்றால் ஆன பொருட்களை சமைத்தல், பரிமாறுதல், சேமித்தல் போன்ற பலவற்றிற்கு பயன்படுத்தினர் அவற்றுள் சில புழங்கு பொருட்களை ஆராய்வதாக இக்கட்டுரை அமைகிறது.*

**புழங்கு பொருட்கள்**

*நம்மைச் சுற்றியுள்ள புற உலகம் முழுவதும் பொருள் சார்ந்ததுதான். நாம் பொருளோடு உறவாடாத நேரம் கிடையாது நம்மோடு தொடர்புடைய எண்ணற்ற பொருட்களுள் புழங்கு பொருட்கள் மிகவும் அன்னியோன்யமானவை. இல்லறத்தில் பயன்படுத்தக்கூடிய புழங்கு பொருட்கள் கல், மரம், உலோகம், மண் போன்ற பலவற்றால் செய்யப்பட்டவையாக உள்ளன.*

**அகல்**

*அகல் என்றால் விரிவு என்று பொருள். எனவே அகன்ற வாயினையும், கீழ்ப்பகுதி தரையில் வைக்கும் படியான அமைப்பினையும் கொண்ட கலன் அகல் என பெயர் பெற்றுள்ளது.*

*அப்பம் விற்கும் வணிகர் கரிய அகலில் பாகொடு கூட்டிச் செய்த நூல் போல் கிடக்கும் இடியப்பத்தைப் பாலில் இட்டு வைப்பர் இதனை,*

**காரகற் கூவியர் பாகொடு பிடித்த**
**இலைசூல் வட்டம் பால்கலந் தவைபோல**

*- (பெரும் : 377-378)*

*என்னும் அடிகள் விளக்குகின்றன. இதிலிருந்து அகழ் உணவு சமைப்பதற்கும், சமைத்ததை வைத்து உண்ணுவதற்கு கலமாக பயன்படுத்தியமை விளங்கும். கரிய அகல்*

*என்பதால் இது கருமை நிறமுடையதாக இருந்திருக்கலாம்.*

**நெற்கூடு**

*நெல்லைச் சேமித்து வைப்பதற்கு பயன்படுத்தப்பட்ட புழங்கு பொருள் "நெற்கூடு" என்பது ஆகும். இதன் பெயர் நெற்கூடு, தொடுகோடு, குதிர் என்றெல்லாம் வழங்கப்பட்டுள்ளது. ஏணிக்கும் எட்டாத மிகவும் நீண்ட உயரமாக இருந்ததை,*

***"ஏணியெய்தா நீனொடு மார்பின்***
***முகடு துமித் தடுக்கிய பழம்பல் லுணவிற்***
***குமரி மூத்த கூடோங்கு நல்லில்"***

***- (பெரும் : 245-247)***

*என்ற பெரும்பாணாற்றுப்படை பாடல் அடிகள் விளக்குகின்றன. மேலும்,*

***"பிடிக்கணத் தன்ன குதிருடை முன்றிற்"***

***- (பெரும் -186)***

*என்ற வரியில் நெற்கூட்டை குதிர் என்ற பெயரால் பதிவு செய்யப்பட்டிருப்பதை அறிய முடிகிறது.*

**கன்னல்**

*தமிழகராதி கன்னல் என்பதற்கு நீர்க்குடம்[1] என்று பொருள் உரைக்கிறது, கன்னலில் நீரிட்டு ஒரு சிறு துளை வழியாக அந்நீரைச் சிறிது சிறிதாகக் கசியவிட்டு நீரினை அளந்து காணும் கருவியாக நாழிகை வட்டிலைப் பயன்படுத்தியுள்ளனர்.*

***"எரிநீர் வையகம் வேலிகு செல்வோய்நின் நின்***
***குடிநீர்க் கண்ணல் இணைத்தென் றிசைப்ப"***

***- ( முல்லை : 57-58 )***

*என்ற முல்லைப்பாட்டு வரிகளை ஆராயும் போது வாடைக் காலத்தில் குவிந்த வாயை உடைய கன்னலில் உள்ள குளிர்ந்த நீர் என்று கண்ணலுக்கு பொருள்படுவதாக அமைகிறது. மேலும்,*

***"தொகுவாய்க் கன்னல் துயிர் உண்ணர்"***

***- (நெடு - 65)***

*என்ற நெடுநல்வாடையிலும் கண்ணல் என்ற சொல் பயன்படுத்தப்பட்டுள்ளது.*

**மிடா**

*மிடா என்பது பானையின் பெயர்களுள் ஒன்றாகும். இம்மிடா குறித்த செய்தி எட்டுத்தொகையில் அக இலக்கியங்களில் அகநானூற்றிலும் பத்துப்பாட்டிலும் காணப்படுகிறது.*

***"காடி வைத்த கலனுடை மூக்கின்"***

***- (பெரும் -57)***

*என்ற அடியை ஆராயும் போது காடி வைக்கப்பட மிடா என்று பொருள் தருகிறது. பரிசில் வேண்டி வருவோர் வல்லுனராயினும் ஆன்றோராயினும் அவர்களுக்கு மிடாவில் உள்ள சோற்றை உண்களம் நிறையும்படி அளிப்பர். என்று மிடா பற்றிய செய்தியை*

***வல்லினம் வல்லாராயினும் சென்றோர்க்கு***
***சாலவீல் நெடுங்குழி நிறைய வீசும்***
***மா அல் யானை யாரு ப் கானத்து[3]***

*என்று அகநானூற்று பாடல் வரிகள் விளக்குகின்றன.*

**தசும்பு**

*தசும்பு என்பதற்கு கள், மது ஊற்றி வைக்கும் குடம் எனலாம்.*

***இடங்கள் தசும்பு கடம் கும்பம் குடம்***
***கண்ணல் என்று கருதுவர் புலவர்[3]***

*என்று குடத்தின் பெயர்களென் ஒன்றாகத் தசும்புவைச் சுட்டுகிறது திவாகர நிகண்டு.*

*தசும்பு என்பது உணவு சமைக்கும் களமாகவும் பால், தயிர், கள் ஆகியவற்றை நிறைத்து வைத்துக் கொள்ளும் ஒரு இல்லற புழங்கு பொருள் என்பதை,*

***"வளஞ்செய் வினைஞர் வல்சி நல்கத்***
***துலங்கு தசும்பு வாங்கிய பசும்பொதித்தோறல்***
***இளங்குது ஞாயிற்றுக் களங்கள் தொறும்"***

***(மலை. 462-464)***

*என்ற மலைபடுகடாம் வரிகளின் மூலம் அறிய முடிகிறது.*

**உரல்**

*உரல் என்பது தானிய வகைகளை குற்றி அரிசியாக்குவதற்கு பயன்படுத்தப்பட்டது. தரையில் குழியை தோண்டி அதனுள் புல்லரிசி போட்டுக் குற்றியதை,*

"*நீழன் முன்றி னிலவுரற் பெய்து*" - (பெரும் .96) என்ற பெரும்பாணாற்றுப்படை வரி விளக்குகிறது.

**உலக்கை**

தானிய வகைகளை உரலில் இட்டு குற்றுவதற்கு பயன்படுத்தப்படுவது உலக்கை ஆகும்.

"**இருக்காழ் உலக்கை இரும்புமுகம் தேய்த்த**"

- (சிறும்.93)

என்ற சிறுபாணாற்றுப்படை வரியில் மூலம் உலக்கை பயன்படுத்திருப்பதை அறிய முடிகிறது.

**மத்து**

ஆயர் மகளிரால் தயிர் கடைவதற்கு பயன்படுத்தப்பெற்றது மத்தாகும். கயிற்றால் வலித்துக் கட்டிய மத்தினை கொண்டு உறையிட்டு இறுகிய தயிரை கடைவர். முல்லை நிலத்தில் விழும் ஆய்ச்சியர் ஒவ்வொருவரும் இருள் புலரும் வைகறையில் தயிர் கடைதல் நடைமுறையாகும்.

"*புலிக்குரல் புத்தம் ஒழிப்ப வாங்கி*" - (பெரும்.156) என்ற வரியில் மத்தொளி என்று புலியின் ஒலிக்கு உவமையோடு கூறப்பட்டுள்ளது.

**பொன்கலம்**

பொன்னால் செய்யப்பட்ட கலத்தை பொன்கலம் என்று குறிப்பிடலாம். அரசர்கள் இதுபோன்ற பொன்னால் செய்யப்பட்ட கலங்களைப் பயன்படுத்தினர். மதுரை தலையாளங்காலத்து செருவென்ற பாண்டிய நெடுஞ்செழியன் பழங்காலத்தில் மனங்கமில் தேரரை பருகினான் என்பதனை,

"**இலங்கிழை மகளிர் பொலங்கலத்து ஏந்திய**
**மணங்கமழ் தேறல் மடுப்பநாளும்**"

- (மதுரை.779-780)

என்ற மதுரைக்காஞ்சி வரிகள் குறிப்பிடுகின்றன.

**முடிவுரை**

சங்க இலக்கியத்தில் பாட்டு என்று அழைக்கப்பெறும் பத்துப்பாட்டில் நாம் அன்றாடம் வீட்டில் பயன்படுத்தும் கருவிகளான (புழங்கு பொருட்கள்) மரம், இரும்பு, தங்கம் போன்ற பலவற்றில் செய்த பொருட்களை காண முடிகிறது. இந்த புழங்கு பொருட்களில் பல இன்றும் நம் இல்லத்தில் பயன்படுத்தக்கூடிய வகையாக உள்ளன.

**சான்றெண் விளக்கம்**

1. தற்காலத் தமிழ்ப் பெயரகராதி, ப.159.
2. அகநானூறு, பா.152.
3. திவாகர முனிவர், சேந்தன் திவாகரம். ப.161.

**துணை நூற்பட்டியல்**


1. காசிவிசுவநாதன் செட்டியார், அகநானூறு, மணிமிடைப்பவளம், திருநெல்வுலி சைவ சித்தாந்தாந்த நூற்பதிப்பு கழகம், சென்னை, பதிப்பு - 1947.
2. சாமிநாதையர் உ.வே, பத்துப்பாட்டு மூலமும் நச்சினார்கனியர், உரையும் உ.வே.சாமிநாதையர் அல்றியம், சென்னை, பதிப்பு - 1974.
3. திவாகர முனிவர், சேந்தன் திவாகரம், திருநெல்வேலி தென்னிந்திய சைவ சித்தாந்த நூற்பதிப்புக் கழகம், சென்னை, பதிப்பு - 1958.